**செ.வெ.எண்.** **நாள்.**

# பத்திரிக்கை செய்தி

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.4,05,71,000/- மதிப்பில் கடன் வழங்கக் கோரி 749 சிறுபான்மை இனத்தவர் விண்ணப்பித்துள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக தகுதியுடைய சிறுபான்மை இனத்தவர்களுக்கு கடன் வழங்குவதற்கு கடன் மேளா மாவட்ட ஊராட்சி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார்.

**<u>இம்முகாமில் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர்</u>**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இஸ்லாமியர்கள், கிருத்துவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தினர், பார்சிகள் மற்றும் ஜெயின் மதங்களை சேர்ந்தவர்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும் வகையில் தொழில்கள் துவங்குவதற்கு பல்வேறு கடன் திட்டங்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் மேம்பாட்டு கழகம் (டாம்கோ) செயல்படுத்துவதற்கு இந்த சிறப்பு முகாமினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த சிறப்பு முகாமில் பல்வேறு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 749 பேர் கடன் கேட்டு விண்ணப்பத்துள்ளனர். அவர்கள் கோரியுள்ள கடன் மதிப்பு ரூ.4 கோடியே 5 லட்சத்து 71 ஆயிரம் ஆகும். இத்திட்டத்தில் புதிய தொழில் தொடங்கவும், தொழிலை அபிவிருத்தி செய்யவும், மரபு சார்ந்த தொழில்களுக்கும் கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் குறைந்தபட்சம் 50,000 ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. தகுதியுடைய விண்ணப்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு கூட்டுறவு வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்படும். கடன் பெறுபவர்கள் கடின உழைப்பை மேற்கொண்டு கடமையுணர்வுடன் தொழில்புரிந்தால் நிச்சயம் வியாபாரத்தில் வெற்றி காண முடியும். கடன் பெறுபவர்கள் முறையாக உரிய காலத்தில் கடனை திருப்பி செலுத்தினால் மீண்டும் கடனுதவி பெற்று மேலும் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும். கடன் பெறுபவர்கள் தொழிலில் நல்ல வருமானத்தை ஈட்டி பொருளாதாரத்தில் மேன்மை அடைய என்னுடைய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மண்ட இணைப்பதிவாளர், திரு.ஆர்.கே.சந்திரசேகரன், உதவி இயக்குநர் / திட்ட மேலாளர், மாவட்ட தொழில் மையம், காஞ்சிபுரம் திரு.ச.அன்பரசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், காஞ்சிபுரம் திரு.ப.முரளி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**